**பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்தல் அதிகார சபை ஆகிய நிறுவனங்களால் அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்த எடுத்துள்ள சாதகமான நடவடிக்கைகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் பாராட்டுகிறது.**

அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ள பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை வெளியிட்டுள்ள 2019.12.31ஆம் திகதிய 2156/16ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பின் மூலம் 2019.08.07ஆம் திகதிய 2135/53ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் திருத்தப்பட்டமை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2020.06.22ஆம் திகதி தமது பாராட்டுகளைத் தெரிவிக்கின்றது. பாவனையாளர் அதிகார சபையின் மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் படி அனைத்து பொருட்களினதும் உற்பத்தி தொடர்பிலான முக்கியமான விபரங்கள் அனைத்தும் பொருட்களின் பொதிகளில், கொள்கலன்களில் அல்லது சிட்டைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடுவதற்கு சகல உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விதிமுறைகள் நுகர்வுப் பொருட்கள் உள்ளடங்கும் 76 வகையான பொருட் தொகுதிகளுக்குப் பொருந்தும்.

2013 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும், அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிலும் சுமார் 150 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகளைத் தாக்கல் செய்தது. அதாவது அரசகரும மொழிக் கொள்கைக்கு ஏற்ப நுகர்வோர் பொருட்கள் குறித்த முக்கியமான தகவல்களை வழங்கவில்லை என்ற அடிப்படையிலேயே அம்முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டன. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளில் அடையாளம் காணப்பட்ட பெரும்பாலான பொருட்கள் மேற்படி வர்த்தமானி அறிவிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் பிரதிபலனாக, வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைக்கு வரும் திகதியாகிய 2020.09.01ஆம் திகதி தொடக்கம் மூன்று மொழிகளிலும் இந்த நுகர்வோர் பொருட்கள் பற்றிய அத்தியாவசிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு சகல நுகர்வோர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

இந்த நாளிலிருந்து, நுகர்வோர் அத்தகைய தயாரிப்புகள் அவற்றின் நுகர்வுக்கு ஏற்றவையாகவும் பொருத்தமானவையாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காக தயாரிப்பு குறித்த குறைந்தபட்சம் அடிப்படை தகவல்களைப் பெறுவது மிக முக்கியமானது. இதுபோன்ற தகவல்களை நுகர்வோர் புரிந்துகொள்ளும் மொழியில் வழங்குவது தனிநபர்களின் தாய்மொழியில் (சிங்கள மற்றும் தமிழ்) அறிவுறுத்தலைப் பெறுவதற்கான உரிமையைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், இது நுகர்வோரின் உடல் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்விலும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் 2013 முதல் பாவனையாளர் அதிகார சபைக்கு சுட்டிக்காட்டிய விடயமாவது நுகர்வுப் பொருட்களில் அத்தியாவசிய தகவல்கள் அதாவது, பொருளின் பெயர், அதிகபட்ச சில்லறை விலை, காலாவதித் திகதி, தயாரிப்பு திகதி, நிகர எடை / அளவு, இறக்குமதி நாடு / உற்பத்தி நாடு மற்றும் பொதி செய்யப்பட்ட திகதி போன்ற நுகர்வோர் பொருட்கள் பற்றிய தகவல்கள். ஆங்கில மொழியில் மட்டுமே அச்சிடப்படுகின்றது. இலங்கையின் அரசியலமைப்பில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் இலங்கையின் அரசகரும மொழிகளாகவும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, நுகர்வோர் பொருட்கள் பற்றிய தகவல்களை ஆங்கிலத்தில் அல்லது ஒரு அரசகரும மொழியில் (சிங்கள அல்லது தமிழ்) மட்டுமே அச்சிடுவது நுகர்வோர் தகவல் அறியும் உரிமையை மீறும் செயலாகும். 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பிரச்சினைனையத் தீர்ப்பதற்கும் இலங்கையின் அரசகரும மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்வதற்கும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார

சபைக்கு அதிகாரம் மற்றும் பொறுப்பு உள்ளது என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது,

இந்த முறைப்பாடுகளுக்கு பதிலளிக்கும் விதமாக, மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அரசகரும மொழிகள் ஆணைக்குழு பல ஆண்டுகளாக பல விசாரணைகளை நடத்தியுள்ள போதிலும் இன்றுவரையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

எனவே, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தாக்கல் செய்த முறைப்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் வினவிய போது அதற்கு அதிகார சபை பதிலளித்தது. அதில் 2135/53ஆம் இலக்க 2019.08.07ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை எண் 68 இன் படி, கட்டளையின் உபஅட்டவணையில் குறிப்பிடப்படும் பொருட்களில் தயாரிப்புத் தொகுதி எண், காலாவதி திகதி, தயாரிப்பு நிகர எடை / அளவு, இறக்குமதி செய்யப்பட்ட நாடு / உற்பத்தி செய்யப்பட்ட நாடு, மீள பொதி செய்யப்பட்டிருப்பின் அவ்வாறு பொதி செய்யப்பட்ட திகதி போன்ற தகவல்களை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தெளிவாக அச்சிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கட்டளை இலக்கம் 68 ஐக் கையாண்டு 2156/16ஆம் இலக்க 2019.12.31ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் கட்டளை இலக்கம் 71 வெளியிடப்பட்டதோடு அந்தக் கட்டளைகள் 2020.09.01 தொடக்கம் அமுலுக்கு வரும்.

அரசகரும மொழிக் கொள்கையை மீறியமை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குரல் எழுப்பியமை மற்றும் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடு செய்தமையானது நுகர்வோர் உரிமைகள் விடயத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்படாத அதேவேளை, அது பரந்த அளவிலானவை விடயத்தைக் கொண்டதாக அமைந்தது. இதனுடன் தொடர்புடைய மற்றுமொரு முறைப்பாடாக அமைந்த விடயம், மருந்துப் பொதிகளில் தகவல் அரசகரும் மொழிக் கொள்கைக்கு அமைவாக இடம்பெறாமை தொடர்பில் தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்தல் அதிகார சபைக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்தமையாகும். தொடர்ந்து மேற்படி கட்டளைகளுக்கு பிரதிவாதிகள் இணங்காமையின் காரணமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தற்போது உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றினை SCFR 102/16 இன் கீழ் தாக்கல் செய்துள்ளதுடன் அது தற்போது விசாரணை செய்யப்படுகின்றது. இதன் சாதகமான ஒரு நடவடிக்கையாக, இலங்கையில் அடையாளம் காணப்பட்ட சில மருந்துப் பொருட்களின் தகவல்கள் அரசகரும மொழிகள் கொள்கைக்கு அமைவாக 2020.01.01ஆம் திகதி தொடக்கம் வெளியிடுவதற்குரியதாக தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்தல் அதிகார சபை 2019.10.14ஆம் திகதிய 2145/01 ஆம் இலக்க வர்த்தமானி மூலமாக நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்த வர்த்தமானி அறிவிப்புகள் மூலமாக அரசகரும மொழிக் கொள்கையை செயற்படுத்துவதற்கும் நுகர்வோருக்கு முக்கியமான தகவல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தமை முக்கியமான ஒரு படிமுறையாக அமைந்த அதே வேளையில், இந்தத் துணிவான வரவேற்கத்தக்க முடிவுகள் செயல்படுத்தப்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகிறது. மூன்று மொழிகளிலும் அனைத்துத் தகவல்களும் ஆலோசனைகளும் அச்சிடப்படுவதன் பிரதிபலனாக ஏற்படக் கூடிய அசௌகரிய நிலைமைகள் சில காணப்படுவதாக இலங்கை வணிக மன்றம் (உணவு குடிபானப் பிரிவு) பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு அறிவித்துள்ளதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அறிந்துள்ளது. இக்கட்டளைகளை நடைமுறைப்படுத்துவது தற்போது தாமதமாகியுள்ள சூழ்நிலையில் இது மென்மேலும் தாமதப்படுத்துவதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அடையாளம் கண்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் பாவனையாளர்களது உரிமைகள் மற்றும் சிறந்த நிலைமையினை பாதுகாப்பதற்காக பொறுப்புடன் கடமையாற்றுமாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சகல தரப்பினரிடமும் வேண்டிக்கொள்கிறது. இந்த நோக்கங்கள் அனைத்து மட்டங்களிலும் சாதகமாவும் முறையாகவும் நடாத்திச் செல்லப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அதிகாரபூர்வ மொழிக் கொள்கையை செயல்முறை ரீதியாக நடைமுறைப்படுத்துவதனை மேற்பார்வை செய்வதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேலும் தொடர்ச்சியாக நடவடிக்கைகளை எடுக்கும்.